**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No. 298 of 2019**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW1** |
| **Name of the Witness** | : | ஞானசுந்தரி |
| **Husband's Name** | : | சிவசுப்ரமணியன் |
| **Age** | : | 38 |
| **Occupation** | : | |
| **Address** | : | 14, வடக்கு தெரு, கீழ்காங்கேயன்குப்பம் கிராமம், முத்தாண்டிக்குப்பம், பண்ருட்டி வட்டம் |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 7th day of March, 2024.

பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்குவிசாரணை :-

1. நான் பிஎஸ்ஸி நர்ஸிங் படித்துள்ளேன். நான் தற்சமயம் எந்த வேலைக்கும் செல்லவில்லை. என் பெற்றோர் முந்திரி வியாபாரம் செய்து வருகின்றார்கள். அந்த தொழிலில் நானும் வேலை செய்து வருகிறேனா என்றால் ஆமாம். என் பிள்ளைகளின் செலவிற்காக நான் அந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். மாதம் எவ்வளவு ரூபாய் வருமானம் ஈட்டுவேன் என்றால், தோராயமாக இருபதாயிரம் வரும். சாட்சி மீண்டும் தானாக, குறிப்பாக பத்தாயிரம் மட்டுமே வரும். முதல் பிரதிவாதி சிவசுப்ரமணியன் யார் என்றால், அவர் எனது கணவர். நானும் என் கணவரும் 2018 ஜனவரி மாதம் முதல் பிரிந்து வாழ்கிறோமா என்றால் ஆமாம். நான் மணிகண்டன் , ஆசிரியர் என்பவருடன் தவறான இல்லற வாழ்வில் வாழ்ந்து வருவதாக கூறி, என் கணவர் எனக்கு எதிராக விவாகரத்து கோரி HMOP நெ 1/2019 என பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளாரா என்றால் ஆமாம். அந்த சங்கதி உண்மையில்லை. என் கணவர் பிஈ எலக்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் படித்துள்ளார். என் கணவர் தான் அவர் குடும்பத்தின் முதல்

பட்டதாரி என்றால் ஆமாம். கடந்த 20 வருடங்களாக என் கணவர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறாரா என்றால் 2007 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். குழந்தைகளை தன் வசம் ஒப்படைக்கக்கோரி என் கணவர் குடும்ப நல நீதிமன்றத்தில் G.O.P. No.74/2019 ஆக மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். என் கணவர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தபிறகு, நான் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் ஒரு மனுவும், ஜீவனாம்சம் கோரி ஒரு மனுவும் பண்ருட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அந்த இரண்டு மனுக்களும் தீர்வு காணப்பட்டுவிட்டன என்றால் ஆமாம். இந்த வழக்கினை, என் குழந்தைகளின்பாதுகாவலர் என்ற முறையில், என் குழந்தைகளின் பாகத்தை கேட்டு, இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் ஷெட்யூல் ஏ மற்றும் ஷெட்யூல் பி என இரண்டு சொத்துப்பட்டியல் குறிப்பிட்டு, அவைகளில் என் பிள்ளைகளுக்குரிய பாகம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளேன்.

2. என் கணவர் சம்பாதித்து அந்த தொகைகளை கொண்டு, எங்கள் குடும்ப கடன் முழுவதையும் அடைத்தார் என்றால் ஆமாம். ஷெட்யூல் ஏ -வில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும், என் கணவர் பெயரில், கிரயப்பத்திரங்கள் உள்ளன என்றால் ஆமாம். என் கணவரின் தகப்பனார் பெயர் ராமச்சந்திரன். என் கணவரின் தகப்பனார் ராமச்சந்திரன், காண்டிராக்டராகவும், முந்திரி வியாபாரம் ஆகியவைகளை செய்து வந்தார் என்றால், அவருக்கு சொந்தமாக பெரிய அளவில் முந்திரி தோப்பு இருந்தது. ஆனால் முந்திரி வியாபாரம் செய்யவில்லை. ராமச்சந்திரனின் தகப்பனார் பெயர் அப்புக்கண்ணு படையாட்சி. மேற்படி அப்புக்கண்ணு படையாட்சிக்கு எத்தனை குழந்தை என்றால், ஒரே ஒரு மகன்

மட்டுமே. அப்புகண்ணு படையாட்சிக்கு சொந்தமான சொத்துக்களின் விஸ்தீரணம் கூற முடியுமா என்றால், ஒரு சொத்து ஆறு ஏக்கர் 91 செண்ட் ஆகும். மற்றொரு சொத்து 1 ஏக்கர் 22 செண்ட் ஆகும். இது அவரால்வாங்கப்பட்ட சொத்தாகும். அப்புகண்ணு படையாட்சி பெயரில் ஆறு ஏக்கர் 91 செண்ட் நிலம் உள்ளதற்கு ஆதரவாக நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் கணவரின் தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், மூன்று பிள்ளைகள் முறையே வைத்தியநாதசாமி, ஆதிலட்சுமி மற்றும் சிவசுப்ரமணியன். என் கணவரின் சகோதரி ஆதிலட்சுமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். என் கணவரின் தகப்பனார் ராமச்சந்திரன், தன் பிள்ளைகள் மைனர்களாக இருந்த காலக்கட்டத்திலேயே மைனர் குழந்தைகளின் பெயரில் அவர் சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ராமச்சந்திரன் தனது மைனர் குழந்தைகளின் பெயரில் சொத்துக்கள் வாங்கியிருந்தாலும், அச்சொத்துக்கள் மைனர் குழந்தைகளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். ஷெட்யூல் பி இனம் 1 சொத்துக்க்ள் தொடர்பான கிரயப்பத்திரங்கள் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 பெயரில் உள்ளது என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 2, 3, 4 மற்றும் 15 சொத்துக்கள் தானப்பத்திரம் மூலம் என் கணவரின் தகப்பனார் ராமச்சந்திரன் என்பவரால், என் கணவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமச்சந்திரன் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டுமே செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், பூர்வீக சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்கவில்லை என்றால், சரியல்ல. பூர்வீக சொத்துக்கள் பொறுத்தும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார். ஷெட்யூல் பி இனம் 5

தொடர்பான சொத்து, 2ம் பிரதிவாதி வைத்தியநாதசாமி பெயரில், கிரயப்பத்திரம் ஆகியுள்ளது என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 6 தொடர்பான சொத்து, எங்கள் குடும்பத்தின் சொத்து கிடையாது என்றும், அது மூன்றாம் நபரின் சொத்து என்றால் ஆமாம். ஷெட்யூல் பி, இனம் 7 தொடர்பான சொத்து, சர்வே எண் 366/13 ல் கண்டுள்ள சொத்து, ராமச்சந்திர படையாட்சி பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஷெட்யூல் பி இனம் 8, மற்றும் ஷெட்யூல் ஏ – வில் இனம் 2 தொடர்பான சொத்துக்கள் பொறுத்து கிரயப்பத்திரம் என் கணவர் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 9 தொடர்பான சொத்து, ராமச்சந்திர படையாட்சி பெயரில் கிரயப்பத்திரம் உள்ளது என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 10 மற்றும் 11 தொடர்பான சொத்துக்கள், ராமச்சந்திர படையாட்சியால் அச்சமயம் மைனராக இருந்த 2ம் பிரதிவாதி வைத்தியநாதசாமி பெயரில், கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 12, தொடர்பான சொத்து, ராமச்சந்திர படையாட்சி பெயரில் கிரயம் என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 13 தொடர்பான சொத்து, 2ம் பிரதிவாதி வைத்தியநாதசாமி பெயரில் அவரது தகப்பனாரால் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 14 தொடர்பான சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல, அது மூன்றாம் நபர் சொத்து என்றால் ஆமாம். ஷெட்யூல் பி இனம் 16 தொடர்பான சொத்து, அப்புகண்ணு படையாட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ஆமாம்.

3. ஷெட்யூல் பி இனம் 1,7,9 மற்றும் 12 தொடர்பான சொத்துக்களை பொறுத்து ராமச்சந்திர படையாட்சி தனது பிள்ளைகள், பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோருக்கு ஆதரவாக ஒரு உயிலாவணத்தை 21.04.2014 அன்று எழுதி

வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுவதையும், தனது சகோதரர் 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தானசெட்டில்மெண்ட் 08.04.2019 அன்று எழுதி வைத்துவிட்டார் என்றால், ஆமாம், ஆர்சிசி வீட்டையும் சேர்த்து எழுதி வைத்துவிட்டார்.

4. என் கணவர் நீதிமன்றத்தில் ஆஜராகி, குழந்தைகளை நல்ல பள்ளியில் படிக்க வைப்பதாக கூறினார் என்றால் ஆமாம், ஆனால் அதன்படி அவர் முயற்சி செய்யவில்லை. என் கணவரின் தகப்பனார் ராமச்சந்திர படையாட்சி என்எல்சியில் காண்டிராக்டராக தொழில் செய்தார் என்றால் ஆமாம். ராமச்சந்திர படையாட்சி தான் காண்டிராக்டர் தொழில் செய்து கிடைத்த வருவாயைக்கொண்டு அனைத்து சொத்துக்களையும் கிரயம் பெற்றார் என்றால், ஆமாம், பூர்வீக சொத்திலிருந்து வந்த வருவாயைக்கொண்டும் சில சொத்துக்களை கிரயம் பெற்றார். அப்புகண்ணு படையாட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து வெறும் 2 ஏக்கர் மட்டுமே என்றால் சரியல்ல. அப்புகண்ணு படையாட்சி பெயரில் 2 ஏக்கர் நிலம் உள்ளதை காண்பிக்க அடங்கல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக இன்னும் பாகம் பிரிபடவில்லை என்றால், பாதி சொத்து பிரிக்கப்பட்டுள்ளது, பாதி சொத்து பிரிக்கப்படாமல் உள்ளது,. ஆனால் இதுவரை பத்திரம் எழுதப்படவில்லை. என் கணவரின் ஆயுட்காலத்தில் என் பிள்ளைகள் எவ்வித பாகமும் கோர இயலாது என்றால், சரிதான். நியாயப்படி என் கணவர் செயல்படாமல், பிள்ளைகளுக்கு சொத்துக்கள் தருவதற்கு பதிலாக சொத்துக்களை தன் அண்ணன் வைத்தியநாதசாமி பெயரில் தவறாக எழுதி வைத்துவிட்டார். விவாகரத்து வழக்கிற்கு பிறகு நான் பலமுறை சொத்துக்களை

அபகரிக்க என் கணவருடன் சண்டை போட்டேன் என்றும், அதனால், என் மீது காவல்நிலையத்தில் புகார் வழங்கப்பட்டது என்றும், எனவே, தனது சொத்துக்களை என்னிடமிருந்து பாதுகாக்க எனது கணவர் தனது சகோதரருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் தவறு.

5. எங்கள் ஊரில் சந்தானகிருஷ்ணன் என்ற கிராம நிர்வாக அலுவலர் உள்ளாரா என்றால் உள்ளார். அவர் எனது உறவினரா என்றால் ஆமாம், உறவினர், எனது கணவர் வழி உறவினர். இந்த வழக்கு முழுவதும் மேற்படி சந்தானகிருஷ்ணனின் தூண்டுதலின்பேரில் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் குழந்தைகளின் நலனுக்காகவே இந்த வழக்கை போட்டுள்ளேன்.

( வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*